**O.S.No.17/2012**

**Date:27.08.2018**

வாதி தரப்பு சாட்சி 1 – அப்துல் முத்தலிப், த-பெ.முகம்மது யூசுப்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எத்தனை வருடமாக நாவினிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்து சுமார் 62 வருடங்களாக அங்குதான் இருக்கிறேன். 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என் உறவினர்கள் என்றால் சரிதான். பிராதில் 1ம் பிரதிவாதியின் சரியான முகவரி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் அப்பா அப்துல்காதர் மற்றும் சம்சுதீன் வாய்க்கிராலாக எங்கு வைத்து, எந்த தேதியில் பாகம் செய்து கொண்டனர் என்றால் 1954ல் பாகம் செய்து கொண்டனர், தேதி மற்ற விபரங்கள் தெரியாது. அது சம்பந்தமான ஆவணங்கள்தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதிக்கு அந்த கிராமத்தில் இன்னமும் சொத்துக்கள் உள்ளது என்றால் தெரியாது. என் நிருபண வாக்குமூலத்தில் 2வது பாராவில் கொட்டடி நிலமும், வைக்கோல் போரும்உள்ளதற்கு சர்வே எண் குறிப்பிடப்படவிலல்ல என்றால் சரிதான். காதர்மைதீன் இறந்த பின்னர் 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரியும் கூட்டாக அனுபவம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவாச் சொத்து குறித்து 2011க்குப் பின்னர் நாளது தேதி வரை வரி ரசீதுகள் எதுவும தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்து குறித்து 1ம் பிரதிவாதிக்கும், சம்சுதீனுக்கும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் வழக்குநடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் 15.03.2011ல் 1ம் பிரதிவாதிக்கு தாவா இடம் முழுவதும் பாத்தியம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தாவாச் சொத்து குறித்து அடங்கல் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது என்றாலும், நான் அந்த உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், நான் ஆவணங்களை சரி பார்க்காமல் அவரிடம் கிரையம் பெற்றுள்ளதால் என் கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்குமூலம் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்து, தேவையில்லாத நபர்களை தரப்பினர்களாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல

செய்துள்ளேன் என்றால் சரியல்ல.